# இஃது ஒரு மாறும் பட்டியல். முழுமையுடைமைக்கான குறிப்பிட்ட சில தரநிலைகளை இதனால் ஒருபோதும் நிறைவு செய்ய முடியாமல் போகலாம்.

இஃது ஒரு மாறும் பட்டியல். ஹேமன் சோங்கின் (Heman Chong) கலைப் படைப்புகளின் கணக்கெடுப்புக்கு வேண்டிய பண்பாகிய முழுமைபெற்றமைக்கான குறிப்பிட்ட சிலத் தரநிலைகளை இதனால் ஒருபோதும் நிறைவு செய்ய முடியாமல் போகலாம்.

இக்கண்காட்சியின் தலைப்பு, விக்கிபீடியாவில் (Wikipedia) உள்ள பட்டியல்களுக்கான பொறுப்புத்துறப்புக் குறிப்பிலிருந்து எடுத்தாளப்பட்ட, ஆயத்தநிலை-எழுத்து அடிப்படையிலான கலைப்படைப்பு ஆகும். நோக்க அறிவிப்பையொத்த இழப்பெதிர் காப்புறுதி ஒன்று, அதன் பயன்பாடு ஓவியரின் பயிற்சிமுறையைப் பற்றிய விரிவான கணக்கெடுப்பன்று என எச்சரிக்கிறது.


Rooms ›

மாறாக, இக்கண்காட்சி, சோங் பண்பாட்டுப் பொருள்களாகக் கருதுபவைகளை உருவாக்கும் பல்வேறு முறைகளைப் பற்றிய ஒரு பார்வையை வழங்குகிறது. 2003 ஆம் ஆண்டு அவரால் முதன்முதலில் உருவாக்கப்பட்ட கலைப்படைப்புகள் முதல் (அவ்வாண்டுதான் சோங் முதன்முதலில் வெனிஸ் ஈராண்டுமுறைக் (Biennale) கலைக் கண்காட்சியில் பங்கேற்று, காணொளிக் கலையைத் துறந்துவிட்டு, சர்வதேச அளவில் கலைப்பொருள் காப்பாளர் பணியைத் தொடங்கினார்) இவ்வமயத்திற்காகத் தனிச்சிறப்பாக உருவாக்கப்பட்ட அண்மைய படைப்புகள் வரை, இக்கண்காட்சி அவரது உலகளாவிய கலைப்படைப்புத் தயாரிப்புத் தளம் மற்றும் சமூக ஊடகத் தளங்களில் இவ்விரு பத்தாண்டுகளில் குறிக்கப்பட்ட அவரது கருத்தியல் பயிற்சிமுறையின் வீச்சுகளைப் பட்டியலிடுகிறது. ஓவியரால் உருவாக்கப்பட்ட இக்கண்காட்சி, பல்வேறு அறைகளுக்கும் பல்வேறு ஓவியக் கோர்ப்புகளுக்கும் (compositions) விரிவடைகிறது, ஒவ்வொன்றும் வெவ்வேறு தலைப்புச்சொற்கள்களின்கீழ் (keywords) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன, அவை: சொற்கள், கிசுகிசுக்கள், பேய்கள், பயணங்கள், எதிர்காலங்கள், கண்டுபிடிப்புகள்,

Rooms ›

உள்கட்டமைப்புகள், மேற்பரப்புகள் மற்றும் முடிவுகள். மேனிலைத் தரவுக் (மெட்டாடேட்டா) குறிச்சொற்களைப் போலவே, இத்தலைப்புச்சொற்கள் ஒருங்கிணைந்த படைப்புகளின் இருப்பியலைப் (ontology) பரிந்துரைக்கின்றன, 21 ஆம் நூற்றாண்டில் மனித நிலையை வெளிப்படுத்தும் பொருள்கள், சூழ்நிலைகள், ஏற்கத்தகு பொருட்டுகள் (logics) மற்றும் தொடர்புகள் பற்றிய சோங்கின் திறனாய்வு மற்றும் உணர்ச்சி அடிப்படையிலான கேள்விகட்குப் பார்வையாளரை அழைக்கின்றன.


# Rooms




‹ Introduction

# Part 1
# சொற்கள்

சொற்கள்தாம் விவரிப்புகளின் கட்டுமானத் தொகுதிகள். கண்காட்சியின் நுழைவுப் புள்ளியில், கைவிடப்பட்ட சொற்களை அடிப்படையாகக் கொண்ட இரண்டு கலைப்படைப்புகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளன.



## தாளில் உள்ள படைப்புகள் #2: தகவலேடு

2006/2024
நீக்கியழிக்கப்பட்ட புனைவுப் பெருங்கதை (novel) - 239 சொற்களைக் கொண்ட மீட்டெடுக்கப்பட்ட கோப்பு, கூகிள் (Google) மொழிபெயர்ப்பு வழியாக ஆங்கிலத்திலிருந்து சீன மொழிக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு மற்றும் அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை உள்ளடக்கிய தளம் சார்ந்த சுவர் நிறுவல்

UCCA Center for Contemporary Artநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

ஓவியரின் திரட்டு

8 ஜூலை 2006 அன்று, சோங் 200 பக்க "தகவலேடு" என்ற புனைவுப் பெருங்கதையை (novel) எழுதத் தொடங்கினார். இக்கதை, ஓர் இளைய கலைஞரிடமிருந்து படைப்புத்திருட்டு செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு கலைஞரின் கடந்தகாலத்தைப் பின்னோக்கிப் பார்ப்பதை மையமாகக் கொண்டுள்ளது - கேள்விக்குரிய அப்படைப்பு "தகவலேடு" என்று பெயரிடப்பட்ட ஒரு புனைவுப் பெருங்கதையாகும், இஃது ஒரு கற்பனைக் கலைப் பள்ளிக்கான ஒரு கட்டுமானப் பெருந்திட்ட வரைபடம் (master plan) பற்றியது. திருத்தல் செயல்பாட்டின்

போது மனவுளைச்சலுற்ற சோங் புனைவுப் பெருங்கதையை நீக்கியழித்தார்.

2024 ஆம் ஆண்டில், அக்கோப்பை மீட்டெடுக்கும் முயற்சியில் அவர் ஒரு தரவு மீட்பு நிறுவனத்தை ஈடுபடுத்தினார், ஆனால் அது மிகவும் மோசமாகச் சிதைந்திருந்ததால் 239 சொற்களை மட்டுமே மீட்டெடுக்க முடிந்தது.

இவ்வெளிப்படைப்-புனைவுப் பெருங்கதைத் துண்டுகள் ஆங்கிலம் மற்றும் மாண்டரின் மொழிகளில் சுவர்த்தாள்களாக (wallpapers) வழங்கப்பட்டுள்ளன, இவை 2025 ஆம் ஆண்டில் சோங்கின் கணக்கெடுப்புக் கண்காட்சியின் நுழைவாயிலில் தொங்கியிருந்து, கடந்த இருபது ஆண்டுகளில் படைக்கப்பட்ட ஓவியரின் உறுதியான படைப்புகளை நினைவுபடுத்துகின்றன.

ரெனீ ஸ்டாலுடன் (Renée Staal) இணைந்து
ஹேமன் சோங் (Heman Chong)
**படிக்கப்படாத நூல்களின் நூலகம்**
*(The Library of Unread Books)*


2016
படிக்கப்படாத நூல்கள், மேசைகள், நாற்காலிகள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கினார்
அளவுகள் வெவ்வேறானவை
9 பதிப்புகளில் 1ஆம் பதிப்பு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

படிக்காத நூல்களை நன்கொடையாக வழங்குவதற்கு விடுக்கப்பட்ட பொது அழைப்பின் வாயிலாக ஒரு குறிப்பெடுப்பு நூலகம் (reference library) உருவானது. சோங் ஒரு சமூகச் சிற்பமாக வர்ணித்த இந்நூலகம், ஒவ்வொரு கண்காட்சியிலும் அதன் சரக்குகளை அதிகரித்தபடி இருந்த, ஒரு பொதுவான நூலகமாகும். சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தால் திரட்டப்பட்ட,‘படிக்காத நூல்களின் நூலகம்’, முன்பு சிங்கப்பூர் ஈராண்டுமுறைக் (Biennale) கண்காட்சியில் 2022-இல் காட்சிப்படுத்தப்பட்டது.

# Part 2
# கிசுகிசுக்கள்

வெற்றுப்பார்வைக்குத் தெரியாத
இரகசியங்களுடையது.



# தாள்வேலை *(Paperwork)*

2024
500 துருப்பிடித்த இரும்புத் தாள்கள்

UCCA Center for Contemporary Artநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

ஓவியரின் திரட்டு

இச்சிற்பம் A4 அளவிற்கு வெட்டப்பட்ட 500 இரும்புத் தாள்களைக் கொண்டுள்ளது—A4 எனபது அமெரிக்கா மற்றும் கனடாவைத் தவிர, உலகளவில் பயன்படுத்தப்படும் ஒரு நிலையான தாள் அளவு ஆகும்.

**எளிய கெடுவினை *(Simple Sabotage)***

2016
எடுத்தாளப்பட்ட எழுத்து, தளம் சார்ந்த சுவர் நிறுவல்

ஓவியரின் திரட்டு

மத்தியப் புலனாய்வு அமைப்பின் (CIA) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யக் கிடைக்கிறது, எளிய கெடுவினை கள வழிகாட்டி (1944), இரண்டாம் உலகப் போரின் முன்னோடியான CIA—வின் மூலோபாயச் சேவைகள் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட ஒரு போர்க்காலச் சூழ்ச்சிக்கான வழிகாட்டியாகும். அதிகாரத்துவ நடைமுறைகளைப் பின்பற்றும் அதே வேளையில் உற்பத்தித்திறனை வேண்டுமென்றே தடுக்க இக்கையேடு பரிந்துரைத்தது.

## தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், வியாழன், 1 நவம்பர் 2012, பக்கம் A8

2018
முதன்மைப்பூச்சிடாத கித்தானில் UV அச்சடிப்பு

ஓவியரின் திரட்டு

“தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்” நாளேட்டுச் செய்திச் சுருக்கங்கள்’ என்பது சிங்கப்பூரின் செய்தி நாளேடான தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸின் (*The Straits Times*) தலைப்புச் செய்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்பட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட தொடர் ஆகும். வெள்ளம் முதல் மின்வெட்டு வரை, சிங்கப்பூரின் செய்திச் சுழற்சியில் பதிவாகும் செயலிழப்புத் தருணங்களில் சோங் கவனம் செலுத்துகிறார், அவர் தனது, திரும்பத் திரும்பச் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச் சேர்க்கும் முறையைத் திறம்படப் பயன்படுத்தி, அவற்றின் செய்திகளை “மூழ்கடித்து” “மறைத்து”, அன்றாடத் தவறுகளை, அப்படைப்பை உருவாக்கும் போது புதிதாக உருவான தவறுகள் மூலம் எதிரொளித்தார்.

‹ Part 2 கிசுகிசுக்கள்
Rooms ›

## ஃபோரர் விளைவு *(The Forer Effect)*

2008
எடுத்தாளப்பட்ட எழுத்து, தளம் சார்ந்த சுவர் நிறுவல் (*ஆர்ட்ரிவியூ (ArtReview)* தொகுதி. 67, எண். 8, 2015 - பத்திரிக்கையிலிருந்து)

ஓவியரின் திரட்டு

அமெரிக்க உளவியலாளர் பெர்ட்ராம் ஆர். ஃபோரரின் (Bertram R. Forer) பெயரிடப்பட்ட "ஃபோரர் விளைவு," பொதுவான கூற்றுகளைத் தனிநபர்களிடம் கொடுத்து ஆய்வு செய்யும்போது அவை தம்மையே மிகத்துல்லியமாகக் குறிப்பனவாக அவர்கள் கருதுவது பற்றி விவரிக்கிறது. ஃபோரர் இதைத் "தனிப்பட்ட சரிபார்ப்பின் தவறு" என்று அழைத்தார். ஃபோரர் தனது மாணவர்களிடம் மேற்கொண்ட அசல் 1948 ஆளுமைச் சோதனைகளிலிருந்து வழங்கிய அவரது கூற்றுகளை சோங் எடுத்தாள்கிறார், அவற்றை வெவ்வேறு சூழல்களுக்குப் பயன்படுத்துகிறார், இதில் கலை உலகின் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களை வரிசைப்படுத்தும் ஆர்ட்ரிவியூ *(ArtReview)* பத்திரிகையின் ஆற்றல்மிகு நூறுபேர் பட்டியலின் (தொகுதி 67, எண். 8, 2015) அட்டைப்படமும் அடங்கும்.

## குறியீடு (கீழ்)

2009
சுவரில் நேரடியாகப் பொருத்தப்பட்ட 9,600 தன்னகத்தே-பிசின் கொண்ட ஒட்டிகள்; ஒரு நாளுக்குள் முடிக்கப்பட்டது


Arnolfini Artsநிலையத்தால்வரையப்பணிக்கப்பட்டது

ஓவியரின் திரட்டு

சோங்கின் (Chong) நீண்டகால மேற்பரப்பிடல் தொடரின் (2007–2012) ஒரு பகுதியாக, குறியீடு (கீழ்) பங்கு மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சிவப்பு முக்கோணத்தின் குறியீட்டை நினைவுபடுத்துகிறது. தன்னகத்தே பிசின் கொண்டுள்ள இவ்வொட்டிகளை நிறுவுவதை ஒரு நாளுக்குள் முடிக்க வேண்டும் என்ற அளவுருவால் வடிவமைக்கப்பட்ட இவ்வேலை, சிவப்பு முக்கோணத்தில் பொதிந்துள்ள நேரத்தையும் உழைப்பையும் குறிக்கிறது, இது சந்தையின் அன்றாட ஏற்ற இறக்கங்களைக் குறிக்கிறது. கட்டுப்பாடின்றி, திட்டமிடப்படாமல் ஒழுங்கமைக்கப்பட்ட இப்படைப்பின் ஒவ்வொரு விளக்கக்காட்சியும், அதன் ஆக்கத்தின் போக்கில் வெளிப்படும் சீரற்ற, கரிமக் கொத்துகள் மற்றும் அமைப்புகளுடன் கூடிய, ஒரு தளம் சார்ந்த தலையீடாகும்.

# Part 3
# பேய்கள்

முடிவுகளையும் அழிப்பையும் எதிர்க்கும், நீடிக்கும் தடயங்கள்.



**ஹோ ஹோ யிங் / 180 டிப்போ சாலை / 1D கில்மன் ஹைட்ஸ் / #01-26 / சிங்கப்பூர் 0410**

2017–தொடர்கிறது
304-வகை துருபிடிக்காத இரும்பில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

முதலிலி முடிவிலிச் (Eternal) சுழற்சியின் ஒரு பகுதியாக, இப்படைப்பு பெருகிவரும் இடிக்கப்பட்ட வீடுகளின் முகவரித் தொகுப்பைச் சேர்ந்தது, குடியிருப்பு மேம்பாட்டிற்கான பரவலான விருப்பத்தின் காரணமாக சிங்கப்பூரில் இஃது ஒரு வாடிக்கையான நிகழ்வாகும். இன்ஸ்டாகிராமில் (Instagram) வெளிப்படையான அழைப்புகள் விடுத்தும் காப்பக ஆய்வு மூலமும் தொகுக்கப்பட்ட, இத்திட்டத்தின் முதல் விளக்கக்காட்சி, நிறம் பூசப்பட்ட பெயர் அட்டைகளின் வடிவத்தில், சிங்கப்பூரின் முன்னோடிக் காட்சியியல் ஓவியர்களின் 15 முகவரிகளைக் கொண்டிருந்தது. ஹோ ஹோ யிங் (1935–2022) என்பவர் சிங்கப்பூரின் புதுப்பாணி ஓவியர் ஆவார், சீன மை ஓவியத்தையும் சுருக்க வெளிப்பாட்டுயியலையும் இணைப்பதில் அவர் பெயர் பெற்றவர். 1964 ஆம் ஆண்டில், ஹோ சிங்கப்பூரில் புதுப்பாணி ஓவியச் சங்கத்தை இணைந்து நிறுவினார்.

# வெளியுறவு விவகாரங்கள் *#218*

2018
முதன்மைப்பூச்சிடாத கித்தானில் UV அச்சடிப்பு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

வெளியுறவு விவகாரங்கள் என்பன ஓவியர் தனது பயணங்களின் போது சந்தித்த தூதரகங்களின் பின்புறக் கதவுகளின் சாதாரணமான புகைப்படங்களின் தொடராகும். இப்பின்புறக் கதவுகள் தூதரகத்தின் விதிவிலக்கான இடத்தின் நுழைவாயிலைக் குறிக்கின்றன, இஃது அந்தந்த நாடுகளின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கான அந்நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர அங்கீகாரத்திற்கான ஒரு பௌதீக வெளிப்பாடும் வரம்பும் ஆகும்.

# இறந்தவர்களுக்கான அழைப்பு
***(Call for the Dead)***

2020
லினன் மீது திரையச்சு மற்றும் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

2020 ஆம் ஆண்டு STPI (சிங்கப்பூர் டைலர் அச்சுக் கழகம்) வாழிடத்தில் இருந்தபோது, ஹேமன் சோங் (Heman Chong), ஜான் லெ காரேவின் (John le Carré) முதல் நூலானஇறந்தவர்களுக்கான அழைப்பைப் *(Call for the Dead)* படித்து, பின்னர் திருத்தினார். பிரிட்டனின் உள்நாட்டு உளவுத்துறைச் சேவையான MI5 மற்றும் அதன் வெளிநாட்டு உளவுத்துறைச் சேவையான MI6 ஆகியவற்றில் பணியாற்றியபோது டேவிட் கார்ன்வெல் (David Cornwell) இந்நூலை லெ காரே (Le Carré) என்ற புனைப்பெயரில் எழுதினார். வினைச்சொற்களைத் தவிர மற்ற அனைத்தையும் அழித்துவிட்டு, சோங்கின் "இறந்தவர்களுக்கான அழைப்பு," ஏதோ ஒன்று நடந்துவிட்டது என்ற உணர்வையும், நமக்கென இல்லாத இரகசியங்களை இவ்வெழுத்து தன்னுள் வைத்திருக்கிறது என்ற விழிப்புணர்வையும் மட்டுமே நமக்கு விட்டுச்செல்கிறது.

## நீக்கியழிக்கப்பட்ட காட்சிகள்*(0)*

2008
அமிலம்-இல்லாத தாளில் புகைப்படத்தொகுப்பு

Thyssen-Bornemisz Art Contemporary (TBA21)
நிலையத்தால்  வரையப்பணிக்கப்பட்டது

ஓவியரின் திரட்டு

நீக்கியழிக்கப்பட்ட காட்சிகளில் உள்ள படங்கள் சோங்கின் கைப்பேசியில் எடுக்கப்பட்ட அன்றாடத் திரைச்சுடுவுகளாகத் (snapshots) தொடங்கின. சூழலும் உள்ளடக்கமும் திருத்தப்பட்டு, அகற்றப்பட்டு, அவை பேய்த்தன்மையான வெற்றிடங்களாகின்றன, ஓவியரால் மட்டுமே நினைவுகூரப்படுகின்றன.

## இரகசியங்களும் பொய்களும் (மறுசீரமைப்புகளின் நிகழாத்தன்மை)

2012
உளவு வகைமைக்குள் மட்டும் 326 புனைவுப் பெருங்கதைகள் (novels), தாள் துண்டாக்கி மூலம் சிதைக்கப்பட்டன.

வெவ்வேறு அளவுகள் கொண்டவை

MGSR Collection திரட்டு


2025 ஆம் ஆண்டு ஒப்புதலுடன் மீளுருவாக்கம் செய்யப்பட்டது

ஓவியரால் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்ட 326 உளவு மற்றும் வேவியல் புனைவுப்பெருங்கதைகளை (novels) உள்ளடக்கிய, இப்படைப்பின் சிதைக்கப்பட்ட வடிவம் - தனித்தனி வரிகளாகக் குறைக்கப்பட்டது - அழிவுச் செயலாக இல்லாமல், மாறாக அவற்றின் அசல் கதைகளின் மறைமுகமான மற்றும் இரகசியமான தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் மறுசீரமைப்பதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது.

‹ Part 3 பேய்கள்                Rooms ›

# Part 4
# பயணங்கள்

காலத்தின் ஓட்டம், கதை, நிலப்பரப்பு மற்றும் கற்பனையின் பறப்புகள்.



## தாளில் படைப்புகள் #1: சாலைகள், பயணங்கள் மற்றும் பிற சறுக்கல்கள் மற்றும் வீழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள்

2024–தொடர்கிறது
கற்பனையான திரைப்படச் சுவரொட்டிகள், அச்சிடப்பட்ட சுவரொட்டிகளை உள்ளடக்கிய தளம் சார்ந்த சுவர் நிறுவல்

ஓவியரின் திரட்டு

குறைந்த தெளிவுத்தன்மை (low-resolution) கொண்ட இணையப் படங்களை எடுத்தாண்ட திரைப்பட நிலைப்படங்களைப் (stills) பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட திருட்டுத் திரைப்படங்களுக்கான கற்பனையான மறைவுலகத் திரைப்படத் திருவிழாவிற்கான சுவரொட்டிகள். இக்கற்பனைத் திருவிழாவில், சிங்கப்பூரில் உள்ள தனியார் வீடுகளில் 365 நாள்களில் 365 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. ஒவ்வொரு திரையிடப்படும் இடமும் திரையிடப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் டெலிகிராம் (Telegram) ஒளிவழி மூலம் அறியப்படும்.

## **தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், புதன்கிழமை, செப்டம்பர்** ***19, 2018, A4***

2018
முதன்மைப்பூச்சிடாத கித்தானில் UV அச்சடிப்பு

ஓவியரின் திரட்டு

“தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்” நாளேட்டுச் செய்திச் சுருக்கங்கள்’ என்பது சிங்கப்பூரின் செய்தி நாளேடான தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸின் *(The Straits Times)* தலைப்புச் செய்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்பட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட தொடர் ஆகும். வெள்ளம் முதல் மின்வெட்டு வரை, சிங்கப்பூரின் செய்திச் சுழற்சியில் பதிவாகும் செயலிழப்புத் தருணங்களில் சோங் கவனம் செலுத்துகிறார், அவர் தனது திரும்பத் திரும்பச் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச் சேர்க்கும் முறையைத் திறம்படப் பயன்படுத்தி, அவற்றின் செய்திகளை “மூழ்கடித்து” “மறைத்து,” அன்றாடத் தவறுகளை, படைப்பை உருவாக்கும் போது புதிதாக உருவான தவறுகள் மூலம் எதிரொளித்தார்.

## நடந்து கொண்டே எழுதுதல் மற்றும் மற்றக் கதைகள்

2020
சிங்கப்பூர் முழுவதும் எட்டு மணி நேர நடைப்பயணத்தின் போது எழுதப்பட்ட 2,581 வார்த்தைகளை உள்ளடக்கிய தளம் சார்ந்த சுவர் நிறுவல், அச்சிடப்பட்ட சுவரொட்டிகள்

ஓவியரின் திரட்டு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் ‘நகரில் நடத்தல்’ தொடருக்காக வரையப்பணிக்கப்பட்டது- அரும்பொருளகத்தின் முந்தைய இடத்தைப் புதுப்பித்தபோது கட்டுமானம் பற்றி தெரிவிக்கும் விளம்பரப் பலகைகளுக்காக உருவாக்கப்பட்டது, நடந்து கொண்டே எழுதுதல் மற்றும் மற்றக் கதைகள், சிங்கப்பூர் முழுவதும் எட்டு மணி நேர நடைப்பயணத்தின் போது சோங் (Chong) தனது ஐபோன் 11 (iPhone 11) இல் எழுதிய 2,581 வார்த்தைகளைக் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பாதை, நேர வரம்பு அல்லது சேருமிடம் ஆகிய எதுவும் இல்லாமல், சோங் வெறுமனே தான் எழுதிச் சோர்வடையும் வரை நடந்தார், அவரால் செய்ய முடியக்கூடிய

அளவுக்கு ஆவணப்படுத்தினார். அவரது நடைப்பயணத்தைப் போலவே, அதன் விளைவாக வந்த எழுத்தும், அமைப்பு, தளம், சூழல் அல்லது நிறுத்தற்குறிகள் என எதையும் கொண்டிருக்கவில்லை, அது வெறுமனே இரண்டு செயல்பாடுகளையும் திறம்படப் படம்பிடித்துச் சுருக்குகிறது.

## வெளிச்சுற்றுப்பாதை நடைப்பயணம்

2013–2024
மறுதோன்றி (Offset) அச்சடிப்பு மூலம் அச்சடிக்கப்பட்ட அஞ்சல் அட்டைகள்
550 துண்டுகள்

UCCA Center for Contemporary Artநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

M கலை அறநிறுவனத்தால் (M Art Foundation) ஆதரிக்கப்பட்ட சுற்றுப்பாதை நடைப்பயணத்தின் மேம்பாடு


ஓவியரின் திரட்டு

சிங்கப்பூரின் வெளிச்சுற்றுப்பாதையில் சோங் நடந்து சென்றபோது எடுத்த புகைப்படங்களைக் கொண்ட 550 அஞ்சல் அட்டைகளைக் கொண்ட வெளிச்சுற்றுப்பாதை நடைப்பயணம், தீவின் வெளியோரக்காட்சிகளைப் படம்பிடிக்கிறது. மணல் சுவர்கள், எல்லைக் கண்காணிப்பின் அடையாளங்கள், கூடாரங்கள், சாலையோரங்களில் ஓய்வெடுக்கும் தொழிலாளர்கள் மற்றும் பசுமையான தாவரங்கள் போன்ற படங்களுடன், நகர-நாட்டின் மென்மையான மற்றும் மீக்காட்சிப்படுத்தப்பட்ட அடையாளக்குறிக்குப் புறம்பாக இப்படைப்பு உள்ளது. அஞ்சல் அட்டைகளாக

வடிவமைக்கப்பட்ட இப்படங்களைத் தேர்ந்தெடுத்து வைத்திருப்பதன் மூலமோ அல்லது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமோ பார்வையாளர்கள் அவற்றின் புழக்கம் மற்றும் நுகர்வில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள்.

# Part 5
# எதிர்காலங்கள்

எதிர்காலம் என்பது ஓர் ஆக்கத்தன்மை கொண்டதும் ஓர் அடிவானம் போன்றதும் ஆகும்.



## **நாட்காட்டிகள்** *(2020–2096)*

2004–2010
பளபளப்பற்ற மெல்லிழை மேற்பதித்த1,001 மறுதோன்றி அச்சடிப்புகள்

வெவ்வேறு அளவுகள் கொண்டவை

NUS Museumநிலையத்தால்வரையப்பணிக்கப்பட்டது

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

2004 மற்றும் 2010-க்கு இடையில் சிங்கப்பூரில் எடுக்கப்பட்ட 1,001 புகைப்படங்களை எழுபதாண்டுகால நாட்காட்டிப் பக்கங்களில் வரிசைப்படுத்திய இக்கலைப்படைப்பு, பொது இடங்களின் முரண்பாடான வெற்றிடப் படங்களை எதிர்காலத்தின் அறியப்படாத எல்லைகளுக்குள் வெளிப்படுத்துகிறது. இக்காலவரிசை ஒழுங்கும் வடிவமைப்பும், கட்டகம் மற்றும் திரும்பத்தொடர்தல் மூலம் வரிசைத்தொடர் நேரத்தைக் குறிப்பதில் 1960களில் இருந்த கருத்தியல் ஓவியத்தின் உத்திகளை நினைவூட்டுகின்றன. மனித இருப்பு மற்றும் செயல்பாடு இல்லாத இப்படைப்பு அண்மைய பெருந்தொற்றுநோயின் ஊரடங்குகளை நினைவூட்டுவதாகத் தெரிகிறது, அதே நேரத்தில் அஃது ஒரு வேறுபட்ட கற்பனைக் கொடுங்கோன்மை கொண்ட எதிர்காலத்தைக் குறிக்கலாம்.

## 106B டிப்போ சாலை சிங்கப்பூர் 102106

2024
அக்ரிலோனிட்ரைல் பியூட்டாடீன் ஸ்டைரீன் (ABS)

UCCA Center for Contemporary Artநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

ஓவியரின் திரட்டு

106B டிப்போ சாலை என்பது ஓவியரின் வீடு மற்றும் படைப்பகத்தின் (studio) முகவரியாகும், அங்கு அவர் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து பணியாற்றியுள்ளார். சிங்கப்பூர் குடிமக்களுக்குக் கிடைக்கும் சொத்துச் சந்தையின் மிகவும் பொதுவான வடிவமான பொது வீடு, ஒரு மதிப்புமிக்க சொத்தாகக் கருதப்படுகிறது. கட்டடக்கலைத் திட்டங்களுக்குப் பதிலாக ஓவியரின் நினைவு மற்றும் விளக்கத்திலிருந்து உருவாக்கப்பட்டு, மேற்கொண்டு கட்டப்பட்ட வடிவாக மாற்றப்பட்ட இச்சீரமைப்பு, உண்மையான சொத்தின் நிகழ்வாய்ப்புள்ள மற்றும் திட்டமிடப்பட்ட வருமானத்தைப் போலவே அதன் உணர்தலில் துல்லியமாக இருப்பதாகக் கூறலாம்.

# வெளியுறவு விவகாரங்கள் #225


2018/2025
UV அச்சடிப்பு செய்யப்பட்ட தீத்தடுப்பு பாலியஸ்டர் துணி ஒரு திரைச்சீலையாக ஆக்கப்படுகிறது.

ஓவியரின் திரட்டு

வெளியுறவு விவகாரங்கள் என்பன ஓவியர் தனது பயணங்களின் போது சந்தித்த தூதரகங்களின் பின்புறக் கதவுகளின் சாதாரணமான புகைப்படங்களின் தொடராகும். இப்பின்புறக் கதவுகள் தூதரகத்தின் விதிவிலக்கான இடத்தின் நுழைவாயிலைக் குறிக்கின்றன, இஃது அந்தந்த நாடுகளின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கான அந்நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர அங்கீகாரத்திற்கான ஒரு பௌதீக வெளிப்பாடும் வரம்பும் ஆகும்.

# Part 6
# கண்டுபிடிப்புகள்

அன்றாடம் எளிதில் காணப்படும் ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகளுடையது.



# அடுக்குகள்

ஓவியரின் திரட்டு

2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு சிற்பத் திட்டமான “அடுக்குகள்,” ஓர் ஆண்டுமுறையிலான, தொடர்ச்சியான தொடராகும், ஒவ்வொரு மறு செய்கையும் ஓர் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்படுகிறது, இஃது இக்காலவரிசை வரம்பின் சீரிடைவெளியையும் பின்பற்றுகிறது. கடந்த ஆண்டில் சோங் படித்துப் பயன்படுத்திய நூல்கள் மற்றும் கண்ணாடிகளைக் கொண்டது - அவை பழக்கமான மற்றும் சாதாரண வீட்டுப் பொருள்கள், ஆனால் தனிப்பட்ட முறையில் பொருள்பொதிந்தவை - ஒவ்வொரு “அடுக்கும்” நிறுத்தற்குறியாகவும், கடந்த காலத்தின் பதிவாகவும் செயல்படுகிறது.

**நிலவரைபட,மும் நிலப்பகுதியும், சாலையோரச் சுற்றுலா, தி மைனே வூட்ஸ் *(The Maine Woods)*, அவர் விரும்பிய கடைசிப் பொருள்**

2012
4 நூல்கள் மற்றும் 2 கண்ணாடிகள்

**காட்டுத்தனமான துப்பறிவாளர்கள் *(The Savage Detectives)*, புது வாழ்க்கை *(The New Life)*, சிறிய நினைவுகள் *(Small Memories)*, நடைக்கூடம் *(Corridor)***

2013
4 நூல்கள் மற்றும் 8 கண்ணாடிகள்

**ஒழுக்கப் பீதி அமைச்சு *(Ministry of Moral Panic)*, என்னைத் தொடாதே *(Noli Me Tangere)*, அலைகள் *(The Waves)*, இருளின் இடது கை *(The Left Hand of Darkness)***

2014
4 நூல்கள் மற்றும் 4 கண்ணாடிகள்

**பார்த்திராத அலிஃப் *(Alif the Unseen)*, எலிசபெத் கோஸ்டெல்லோ *(Elizabeth Costello)*, ஒரு தனிப்பட்ட தொகுப்பு, விடுவிப்பு**

2015
4 நூல்கள் மற்றும் 3 கண்ணாடிகள்

**மீன்பிடித்தல் குறித்து ஹெமிங்வே *(Hemingway on Fishing)*, ஆழ்சிவப்பு இதழும் வெண்மையும் *(The Crimson Petal and the White)*, தனிமை*(Loneliness)*, கல்லாகிப்போன கோள் *(The Petrified Planet)***

2016
4 நூல்கள் மற்றும் 4 கண்ணாடிகள்

**மற்றவர்களின் நூல் *(The Book of Other People)*, அசாதாரணக் கதைகள் *(Extraordinary Tales)*, எழுதுவதற்கு அச்சம் *(Fear of Writing)*, மனிதன் தவறாகக் கூறக் காணப்பட்டான் *(Man Vu Mal Dit)***

2017
4 நூல்கள் மற்றும் 4 கண்ணாடிகள்

**வெறுப்பின் கோடை *(Summer of Hate)*, எதிரி *(Foe)*, சாலை *(The Road)*, ஆகநீலக் கண் *(The Bluest Eye)***

2018
4 நூல்கள் மற்றும் 4 கண்ணாடிகள்

**ஆப்பிளும் கத்தியும் *(Apple & Knife)*, அருமையான எலும்புகள் *(The Lovely Bones)*, வெளிநாட்டில் நிலச்சொத்து வாங்குவது எப்படி, பெருநிறுவன உத்தியில் நிலச்சொத்துச் சந்தை**

2019
4 நூல்கள் மற்றும் 3 கண்ணாடிகள்

**இயேசுவின் குழந்தைப் பருவம், கோடைக்காலம், மேய்ப்பர்களின் கல்லறைகள் *(Cowboy Graves)*, சுடர் எழுத்துகள் *(The Flame Alphabet)***

2020
4 நூல்கள் மற்றும் 6 கண்ணாடிகள்

**உறவுத் துண்டிப்பு *(Severance)*, எரிந்த மேலங்கி *(Burntcoat)*, ஒருவேளை நீங்கள் இங்கே இருந்திருந்தால், எங்கள் நாட்டு நண்பர்கள்**

2021
4 நூல்கள் மற்றும் 3 கண்ணாடிகள்

**வெள்ளைப் புத்தகம் *(The White Book)*, இல்லாத இடத்திலிருந்து மைல் தொலைவு *(Miles from Nowhere)*, சபை*(Assembly)*, அறிவிப்புகள் *(Intimations)***

2022
4 நூல்கள் மற்றும் 3 கண்ணாடிகள்

**போலிக் கணக்குகள், அழகும் சோகமும், முற்றுகையிடப்பட்ட நகரம் *(The Besieged City)*, தீமையின் இரகசியம் *(The Secret of Evil)***

2023
4 நூல்கள் மற்றும் 4 கண்ணாடிகள்

**தகவல், தகவல், மார்பகங்களும் முட்டைகளும் *(Breasts And Eggs)*, பெருநகரக் கதைகள் *(Metropolitan Stories)***

2024
4 நூல்கள் மற்றும் 3 கண்ணாடிகள்

2024–தொடர்கிறது
Met-இல் உள்ள ஓவியத்திலிருந்து படங்களுடன்
தளம் சார்ந்த நிறுவல்
வெவ்வேறு அளவுகள் கொண்டவை

ஓவியரின் திரட்டு

Mara Cosonதிரட்டு

ஓவியங்களில் நூல்கள், நூலகங்கள் மற்றும் எழுத்துகள் இருப்பதைக் கண்டு ஈர்க்கப்பட்டு, மார்ச் 2023இல் மூன்று நாள்கள் நியூயார்க்கில் உள்ள பெருநகரக் கலை அரும்பொருளகத்தில் (Metropolitan Museum of Art) தீவிரமாக அலைந்தபோது ஓவியர் கண்டுபிடித்தவைகளைச் செவ்வரளிகள் *(Oleanders)* தொகுக்கிறது. இத்தலைப்பு 1888 ஆம் ஆண்டு வின்செண்ட் வான் கோ (Vincent van Gogh) (1853–1890) வரைந்த ஒரு நிலை-உயிர் (still-life) ஓவியத்தை எடுத்தாள்கிறது, அதில் முழுமையாகப் பூத்துக் குலுங்குகின்ற இளஞ்சிவப்பு செவ்வரளிகளுக்கு அருகில் இரண்டு நூல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று எமிலி சோலாவின் (Émile Zola) புனைவுப் பெருங்கதையான லா ஜோய் டி விவ்ரே

*(La Joie de Vivre)* (1884). வான் கோ (Van Gogh) தனது ஓவியத்தில் சோலாவின் (Zola) பெயரையும் நூலின் தலைப்பையும் சேர்த்துள்ளார் - இது மெட் நிறுவனத்திலிருந்து சோங்கின் சொந்த எடுத்தாள்கையைக் காட்டுகிறது.

## கண்டிப்பாக இந்த மாடம் சமூகப் பிணைப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமே

2015

வினைல் எழுத்துகள், அலுமினியத் தகடு, பளபளப்பான மெல்லிழை மேற்பதித்தது

ஓவியரின் திரட்டு

# சிங்கப்பூர் கொடி

2015
எடுத்தாளப்பட்ட எழுத்து, தளம் சார்ந்த சுவர் நிறுவல்

Valentine Willie Fine Artநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு மற்ற நாட்டுக் கொடிகளைப் போலவே, சிங்கப்பூரின் கொடியும் நாட்டின் இலட்சியங்கள், நம்பிக்கைகள் மற்றும் மதிப்புகளைக் குறிக்கும் ஒரு சின்னமாகும். எழுத்துவடிவாக, இக்கலைப்படைப்பு கொடியின் அதிகாரப்பூர்வ விளக்கத்தை மீளுருவாக்குகிறது, இது நாட்டுக் கொடியின் அதே சிவப்பு நிறத்தில் வழங்கப்படுகிறது, இது கொடியை நேரில் பார்ப்பதற்குப் பதிலாக கற்பனையில் காண அனுமதிக்கிறது.

**அச்சச்சோ! ஏதோ தவறு நடந்துவிட்டது. அதை முடிந்த விரைவில் சரிசெய்ய நாங்கள் பணியாற்றி வருகிறோம்**

2015
எடுத்தாளப்பட்ட எழுத்து, தளம் சார்ந்த சுவர் நிறுவல் ஓவியரின் திரட்டு

ஓவியரின் திரட்டு

# கடினமான இசை ஒலிக்கிறது

2025
கித்தானில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

## தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், வெள்ளிக்கிழமை, 27 செப்டம்பர் 2013, அட்டைப்படம்

முதன்மைப்பூச்சிடாத கித்தானில் UV அச்சடிப்பு

“தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்” நாளேட்டுச் செய்திச் சுருக்கங்கள்’ என்பது சிங்கப்பூரின் செய்தி நாளேடான தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸின் *(The Straits Times)* தலைப்புச் செய்திகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்பட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட தொடர் ஆகும். வெள்ளம் முதல் மின்வெட்டு வரை, சிங்கப்பூரின் செய்திச் சுழற்சியில் பதிவாகும் செயலிழப்புத் தருணங்களில் சோங் கவனம் செலுத்துகிறார், அவர் தனது திரும்பத் திரும்பச் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச் சேர்க்கும் முறையைத் திறம்படப் பயன்படுத்தி, அவற்றின் செய்திகளை “மூழ்கடித்து” “மறைத்து”, அன்றாடத் தவறுகளை, படைப்பை உருவாக்கும் போது புதிதாக உருவான தவறுகள் மூலம் எதிரொளித்தார்.

‹ Part 6 கண்டுபிடிப்புகள்                Rooms ›

# அனைத்தும் (விக்கிபீடியா)

2016
கைப்பேசிக் கருவியில் படித்துப் பார்ப்பதை உள்ளடக்கிய காலமுறை நிகழ்த்துகலை (performance)

Rockbund Art Museumநிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

சமகாலச் சமூகத்தில் அறிவுப் பெருக்கம், தகவல் சரிபார்ப்பு மற்றும் புழக்கத்தின் தன்மையைக் குறிக்கும் வகையில், விக்கிபீடியாவின் “இலவசத் தகவல்களஞ்சியம் (free encyclopaedia)” அதன் கூட்ட-வளத்தால் (crowd source) உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தை எப்போதும்-மாறிவரும் வாசிப்பிற்கு ஏற்ப வழங்கப்படுகிறது. அன்றைய நாளின் விக்கிபீடியா பக்கத்திலிருந்து தொடங்கி, ஒரு நிகழ்த்துகலைஞர் தளத்திலுள்ள எண்ணற்ற இணைப்புத்தடங்களில் (hyperlinks) ஊடாகச் செல்லும் வேளையில் உள்ளடக்கங்களை சத்தமாகப் படிப்பார், இது வெளிப்படையாக முடிவில்லாத தகவல்களுக்கு வழிவகுக்கிறது.

# Part 7
# உள்கட்டமைப்பு

வரலாற்று அடிப்படையிலும் சொற்பிறப்பியல் அடிப்படையிலும் இராணுவ இயக்கத்தைச் செயல்படுத்துவதைக் குறிப்பிடுகையில், இன்று உள்கட்டமைப்பு என்பது நாட்டுத் திட்டப்பணிகள், சட்டங்கள் மற்றும் நெறிமுறைகள், வலைமைப்புகள் மற்றும் தொழில்நுட்பம் வரை அனைத்திற்கும் பொருந்தும் - உலகை வரையறுத்து வடிவமைக்கும் அன்றாட அமைப்புகளின் பெருங்கட்டமைப்பைப் பற்றி பேசுகிறது.

“நவீனத்துவம் மற்றும் அதற்கும் அப்பால்” என்பது சோங்கின் தற்போதைய “சுற்றுப்புற நடைப்பயணம்” தொடரின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட காணொளிகளாகத் தொடங்கியது, அதில் அவர் நடக்கும்போது காணொளிகளைப் பதிவு செய்கிறார், இதை அவரது YouTube ஒளிவழியில் பதிவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஓடும் இரண்டு காணொளிகளும், 2020 ஆம் ஆண்டு பிராஸ் பாசா (Bras Basah) சாலையில் உள்ள சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் (SAM) முன்னாள் வளாகமான செயிண்ட் ஜோசப் நிறுவனம் (St. Joseph’s Institution) மற்றும் முன்னாள் கத்தோலிக்க உயர்நிலைப் பள்ளி (Catholic High School) கட்டடங்களில் தயாரிக்கப்பட்டன. அந்நேரத்தில்,

SAM இன் புதுப்பித்தலின் காரணமாக அமைக்கப்பட்ட கட்டடங்களின் விளம்பரப் பலகைகளைச் செய்ய சோங் பணிக்கப்பட்டிருந்தார். அதன் புதுப்பித்தலுக்கான தயாரிப்பில் இருந்த நிறுவனத்தை ஆவணப்படுத்தும் இக்காணொளிகள், கலை மற்றும் பண்பாட்டு உள்கட்டமைப்பின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களின் ஒப்பனையற்ற பதிவுகளை வழங்குகின்றன. இப்படைப்பின் தலைப்பு, SAM இன் தொடக்கக் கண்காட்சியான, “நவீனத்துவம் மற்றும் அதற்கும் அப்பால்” என்ற அதே பெயரில், தென்கிழக்கு ஆசியக் கலை (1996) என்ற கருப்பொருளில் அமைந்துள்ளது.

## நவீனத்துவம் மற்றும் அதற்கும் அப்பால்

2020
காணொளி, 4k உயர் வரையறை, இரண்டு-ஒளிவழிகள், 16:9, நிறம் மற்றும் ஒலி (ஸ்டீரியோ), 68 நிமிடம்

ஓவியரின் திரட்டு

## Part 8
# மேற்பரப்புகள்


ஓவியத்தின் மேற்பரப்பு ஒரு தொடர்ச்சியான குறியீடு, இடைமுகம், ஆவணம் மற்றும் பண்டமாகும்.

பிற்கால முதலாளித்துவத்தின் ஒரு பாணியாக உடனடித்தன்மையையும் நமது தற்போதைய உலகளாவிய அரசியல்-பொருளாதார நிலப்பரப்பையும் பற்றி எழுதும் கோட்பாட்டாளர் அன்னா கோர்ன்ப்ளூ (Anna Kornbluh) , “ஓர் ஓவியம் ஒரு செய்தியை அனுப்பவோ அல்லது ஓர் இலக்கை அடையவோ ஒரு திறமையான வழியன்று, ஆனால் அதன் திறமையற்ற மறைமுகத்தைக் காண்பது சிந்தனையைத் தூண்டும்” என்று குறிப்பிடுகிறார்.

2009 ஆம் ஆண்டு ஷாங்காய் சமகால ஓவியத் திருவிழாவில் (Shanghai Contemporary Art Fair) ஒரு சிறப்புக் கண்காட்சியில் பங்கேற்கப் பணிக்கப்பட்டதிலிருந்து சோங் ஓவியம் வரைந்து வருகிறார். ஓவியத் திறனாய்வுரையாளர் ஜான் வெர்வோர்ட்டின் (Jan Verwoert) நகைச்சுவையால் அவர் ஓவியம் வரைவதில் ஈர்க்கப்பட்டார்: “கருத்தியல் கலைஞர்கள் ஏன் மீண்டும் ஓவியம் வரைகிறார்கள்? ஏனென்றால் அவர்கள் அதை

ஒரு நல்ல யோசனை என்று நினைக்கிறார்கள்.”
சோங்கின் ஓவியப் பயிற்சி ஓவியத்தைப் பற்றியது அன்று, மாறாக ஓர் ஓவியத்தை ஒரு கருத்தியல் பொருளாக உருவாக்குவதைப் பற்றியது.

ஒவ்வோர் ஓவியத் தொடரும் ஒரு குறிப்பிட்ட கித்தான் அளவு அல்லது நிறப்பூச்சு வகை போன்ற வரையறுக்கப்பட்ட விதிகளின் தொகுப்பைப் பின்பற்றுகிறது. சோங்கின் ஓவியங்கள் அவரது அன்றாட வாழ்க்கையின் பொருள்கள் மற்றும் அளவுருக்களைப் பிரதிபலிக்கும் அமைப்புகளாகச் செயல்படுகின்றன. இதையொட்டி, இவ்வோவியங்கள் பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியாத அமைப்புகள் மற்றும் சமூக உறவுகளைப் பிரதிபலிக்கின்றன, அவை அவற்றுக்கு மதிப்பு மற்றும் விளக்கத்தைப் படங்களாகவும் பொருள்களாகவும் வழங்குகின்றன.


31
30
29
32
33
34
35
36

# பாதுகாப்பான-நுழைவு பதிப்பு 2.4

2020
கித்தானில் அக்ரிலிக்

## சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

COVID-19 காலத்தில் சிங்கப்பூரில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தேசிய அளவிலான மின்னிலக்கமுறை நுழைவு அமைப்பான SafeEntry, தொடர்புத்-தடமறிதல் நோக்கங்களுக்காக, தனிநபர்கள் செல்லும் இடங்களைப் பதிவு செய்யப் பயன்படுகிறது.

2019 ஆம் ஆண்டில், சிங்கப்பூர் கலை அரும்பொருளகம் (SAM) புதுப்பித்தல் பணிகளுக்காக மூடப்பட்ட அதே நேரத்தில் அதன் கட்டடங்களைச் சுற்றி அமைக்கப்பட்ட கட்டுமான விளம்பரப் பலகைகளை ஓவியம் வரையப்பணித்தலுக்கான இடமாகப் பயன்படுத்தியது. விளம்பரப் பலகைகளுக்காக சோங் உருவாக்கிய இரண்டு படைப்புகளில் ஒன்று, பிராஸ் பாசா (Bras Basah) சாலையில் உள்ள அருங்காட்சியகத்தின் முன் முகப்பில் பரவியிருந்த SafeEntry ஆகும். இந்நிறுவலில், தொடர்புத்-தடமறிதல் மூலம் பழக்கப்படுத்தப்பட்ட,

அப்போது எங்கும் நிறைந்திருந்த QR குறியீடு முறை இடம்பெற்றிருந்தது, அது பெரிதாக்கப்பட்டு, ஒன்றன்மேல் ஒன்றாகச் செய்யப்பட்டு, செயல்பாட்டில் சற்றே சிதைந்து, கண்காணிப்புக்குப் படிக்க முடியாததாக மாற்றப்பட்டது.

சுவரோவியத்துடன் கூடிய தனியொரு பதிவன் (camera)-படிக்கக்கூடிய QR குறியீடு, சாங்கி விமான நிலைய முனையம் 2-இன் காணொளியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது, இது புதுப்பித்தலுக்காக முனையம் மூடப்படுவதற்கு முந்தைய நாள், 30 ஏப்ரல் 2020 அன்று சோங் பதிவு செய்தது. இக்காணொளி, சர்வதேசப் பயணம் நிறுத்தப்பட்டிருந்த கோவிட்-19 நோய்ப் பரவலை முறியடிப்பதற்கான அதிரடித் திட்டத்தின் (circuit breaker) 10வது நாளான ஏப்ரல் 16, 2020 அன்று பதிவேற்றப்பட்ட முனையம் 2-இன் வரலாற்று ஆவணமாகச் செயல்படுகிறது.

விளம்பரப் பலகையிலுள்ள வடிவமைப்பு, பாதுகாப்பான நுழைவின் (Safe Entry) பதிப்பு 2.4-இல் காணப்படுவது போல், வேண்டுமென்றே சதை நிறத்தில் பின்னர் கித்தானில் வரையப்பட்டது.

## அந்நியர்களிடமிருந்து வரும் மின்னஞ்சல்கள்

2025
கித்தானில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

# நிலைப்படக் கட்டடம் #1

நிலைப்படக் கட்டடம் தொடரிலிருந்து

2023–தொடர்கிறது
கித்தானில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

தொடரின் முதல் ஓவியமான நிலைப்படக் கட்டடத்தில், சிதறிய பெயர் அட்டைகள் நிறம் பூசப்பட்டு, காணப்படாத மற்றும் இழந்த தொடர்புகளைக் குறிக்கின்றன. இத்தொடர் ஹரேஷ் சர்மாவின் நாடகமான, “தேவையான மேடை (The Necessary Stage)“ நடத்திய “நிலைப்படக் கட்டடம்” (1992) என்பதிலிருந்து அதன் தலைப்பை எடுத்தாள்கிறது. இந்நாடகம் 1986 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் உள்ள ஹோட்டல் நியூ வேர்ல்ட் (Hotel New World) இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கிய மூன்று பேர் மீட்புக்காகக் காத்திருக்கும் காட்சிகளைப் பின்பற்றுகிறது.

## நில நடுக்கோடுகளின் நூல் #1

2024
பாலியஸ்டர் பருத்தியில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

நூலகங்கள் கட்டகத்தை நடமாடவைக்கும் வேளையில், “நில நடுக்கோடுகளின் நூல்” வரியைப் பயன்படுத்துகிறது. இத்தொடர், திரைச்சீலைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அன்றாடப் பயன்பாட்டு பாலியஸ்டர் துணிகளைப் பயன்படுத்துகிறது. சிங்கப்பூர் உட்பட முன்னாள் பிரிட்டிஷ் காலனிகளில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் வெப்பமண்டலத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பதிவுருக்களைக் (motifs) கொண்ட துணிகளை சோங் தேர்வு செய்கிறார். அட்சரேகை மற்றும் தீர்க்கரேகைக் கோடுகளைப் பின்பற்றி, சோங் துணிகளின் வடிவொழுங்குகளின் (patterns) மீது இவ்வரையறுக்கும் கோடுகளைத் திணிக்கிறார், கற்பனை மற்றும் தொழில்துறை இரண்டிலும் வெப்பமண்டலங்களின் மீதான ஏகாதிபத்தியத் திணிப்பையும், நடுத்தர வர்க்க நுகர்வில் அவர்களின் பங்கையும் சாடுகிறார்.

‹ Part 8 மேற்பரப்புகள்
Rooms ›

**நூலகங்கள் #29**

2025
கித்தானில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

சிக்கலான தன்மையை ஒழுங்கமைக்க, மனிதனின் உள்ளார்ந்த தேவையைப் பேசும் கட்டகத்தின் ஏற்கத்தகு காரணங்களை நூலகங்கள் ஓவியம் பயன்படுத்துகிறது. நூலகங்களின் வரிசைப்படுத்தப்பட்ட பன்முகத்தன்மையை எதிரொலிக்கும் இவ்வோவியங்கள், நேர்மறை மற்றும் எதிர்மறை வெளிகளின் ஊசலாட்டங்களுடன், ஒரு நூலகம் வைத்திருக்கக்கூடிய கருத்துகள் மற்றும் காலவெளிகளின் மாறிவரும் முன்னோக்குகளைப் பரிந்துரைக்கின்றன.

## வாண்டர்லஸ்ட் *(Wanderlust)* / ரெபேக்கா சோல்னிட் *(Rebecca Solnit)*

உறை (பதிப்புகள்) தொடரிலிருந்து

2025
கித்தானில் அக்ரிலிக்

ஓவியரின் திரட்டு

வாண்டர்லஸ்ட் / ரெபேக்கா சோல்னிட் *(Wanderlust / Rebecca Solnit)* என்பது நடைபெற்றுக்கொண்டிருக்கும் “உறை” (பதிப்புகள்) (2009–) தொடரின் ஒரு பகுதியாகும், இது சோங்கின் ஓவியப் பயிற்சியின் தொடக்கத்தைக் குறிக்கிறது மற்றும் அவர் இதுவரை படிக்காத ஆனால் படிக்க விரும்பும் நூல்களுக்கான அட்டைகளை வரைவதைக் காட்டுகிறது. காலப்போக்கில், ஒவ்வொரு ஓவியத்திற்கும் ஒரே முறையையும் அளவுருக்களையும் பின்பற்றி, இத்தொடரில் உள்ள ஓவியங்கள் மிகவும் ஓவியத்தன்மை கொண்டவையாக மாறிவிட்டன.

தொடர் முழுவதும், சோங் தொடர்ந்து ஒரே கித்தான் அளவு, மிகைப்படுத்தப்பட்ட தூரிகையடிப்புகள் மற்றும் சுருக்கப்பட்ட நிறத் தொகுப்புகளுடன் பணியாற்றியுள்ளார். அவர் அதே விற்பெயர் (brand) கொண்ட அக்ரிலிக்

நிறப்பூச்சைப் பயன்படுத்தி வருகிறார்.
கித்தான் மற்றும் நிறப்பூச்சு இரண்டும் பிராஸ் பாசா (Bras Basah) வணிக வளாகத்தில் (உள்ள ஒரு கலைப் பொருள்கள் கடையான ஆர்ட் ஃப்ரெண்டிலிருந்து (Art Friend) முன்கூட்டியே வாங்கிவைக்கப்பட்டவை.

# எழுதப்படாமல் இருக்கும் விஷயங்கள் #118

2018
கித்தானில் அக்ரிலிக்
ஓவியரின் திரட்டு

எழுதப்படாமல் இருக்கும் விஷயங்கள் #118 என்பது சோங்கின் மிகவும் சுருக்கமான ஓவியங்களில் ஒன்றாகும்.

**“உலகில் உள்ள அனைத்தும் ஓர் ‘ஆம்’ என்ற சொல்லுடன் தொடங்கியது. ஒரு மூலக்கூறு மற்றொரு மூலக்கூறுக்கு ஆம் என்று சொன்னது, உயிர் பிறந்தது. ஆனால் வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கு முன்பு வரலாற்றுக்கு முந்தைய வரலாறு ஒன்று இருந்தது, ‘ஒருபோதும் இல்லை’ என்ற சொல்லும், ‘ஆம்’ என்ற சொல்லும் இருந்தன. அஃது எப்போதும் அப்படித்தான். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் பிரபஞ்சம் ஒருபோதும் தொடங்கவில்லை என்பது எனக்குத் தெரியும்.”**

நட்சத்திரத்தின் மணி நேரம்
*(The Hour of The Star)* தொடரிலிருந்து

2013
முதன்மைப்பூச்சிடாத லினனில் அக்ரிலிக்


ஓவியரின் திரட்டு

சோங்கின் மிகப்பெரிய ஓவியத் தொடரான நட்சத்திரத்தின் மணி நேரம் *(The Hour of The Star),* கித்தானின் மூலப்பொருளை ஆராய்கிறது. முதன்மைபூச்சிடாத லினனுடன் பணிபுரியும் அவர், முதன்மைபூச்சிட்ட கித்தானில் பணிபுரிவதை விட கடினமான மற்றும் ஒப்பீட்டளவில் மெதுவான செயல்முறையைத்

தழுவுகிறார். 1977 ஆம் ஆண்டு கிளாரிஸ் லிஸ்பெக்டரின் (Clarice Lispector) நட்சத்திரத்தின் மணி நேரத்தைப் *(The Hour of The Star)* படிக்க சோங் செலவழித்த நேரத்தை இவ்வோவியங்கள் பிரதிபலிக்கின்றன. இத்தொடரில் சோங் ஒவ்வோர் ஆண்டும் ஓர் ஓவியத்தை வரைகிறார், ஒவ்வொரு தலைப்பும் நூலிலிருந்து ஒரு வாக்கியத்தைப் பெறுகிறது. தொடரின் முதல் ஓவியமான இவ்வோவியம், புனைவுப்பெருங்கதையின் (novel) தொடக்க வாக்கியத்தைக் கொண்டுள்ளது.

# Part 9
# முடிவுகள்

நான் உன்னை மீண்டும் எப்போது பார்ப்பேன்?



## நாம் வசதியாக மறந்துவிட்ட மக்களின் நினைவுச்சின்னம் (நான் உங்களை வெறுக்கிறேன்)

2008
300 ஜிஎஸ்எம் தடிமனுள்ள தாளில் ஒரு மில்லியன் மறுதோன்றி அச்சடிப்புகள

Singapore Biennale 2008 சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

ஓவியரின் திரட்டு

காலடியில் உள்ள ஒரு நினைவுச்சின்னம், கருப்பு நிறத்தில் பெயர் அட்டைகள் தரையை மூழ்கடித்து, அமைப்பு மற்றும் ஸ்திரமின்மை இரண்டையும் அறிமுகப்படுத்துகின்றன, அதன் தலைப்பு பார்வையாளரை முடிவுக்கு கொண்டுவரும் உணர்வு மற்றும் உணரப்படாத இணைப்புகளின் இருத்தலியல் எடையுடன் நிரப்புகிறது.

# நிகழ்த்துகலைகள்

## வடிவியல் பற்றிய ஒரு சிறுகதை

“நினைவுகள்” தொடரிலிருந்து

2009
ஒரு பயிற்றுவிப்பாளர், ஒரு பங்கேற்பாளர் மற்றும் ஒரு சிறுகதையை உள்ளடக்கிய காலமுறை நிகத்துகலை (performance)

Musée de la danse and T:>Works நிலையத்தால் வரையப்பணிக்கப்பட்டது

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

சோங் எழுதிய கொண்ட சிறுகதையொன்று, ஒரு பயிற்றுவிப்பாளரால் பார்வையாளர் ஒருவருக்குக் கற்பிக்கப்படுகிறது, அவர் அதை மனப்பாடம் செய்ய ஒப்புக்கொள்கிறார், இஃது அப்பயிற்றுவிப்பு அமர்விலேயே ஒரு துல்லியமான மறுஒப்பித்தல் மூலம் மெய்ப்பிக்கப்படுகிறது. ஒருபோதும் பதிப்பிக்கப்படாத அக்கதை வாய்வழிப் பரிமாற்றம் மூலம் மட்டுமே உயிர்ப்பில் உள்ளது, படைப்பை அனுபவிக்க நேரம் மற்றும் முயற்சியின் பரிமாற்றம் தேவைப்படுகிறது.

பங்கேற்க, பெயர் மற்றும் தொடர்புத் தகவலுடன் ஒரு மின்னஞ்சலை hemanchong.memories@singaporeartmuseum.sg என்ற முகவரிக்கு அனுப்பவும்.